## தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - 2014

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத்தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு, 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்கள் (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 பஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில் திணைக்களத்தின் 06 உத்தியோகத்தர்களும் தொழில் அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்களும் நிறுவனத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,039,599 தொகை திணைக்களத்தினதும் அமைச்சினதும் செலவுத் தலைப்புக்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. இச் செலவுகள் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,250,000 மதிப்பீட்டுப் பெறுமதியினைக் கொண்ட வேன் ஒன்று நிறுவனத்தின் குழாம் வாகனமாக மாற்றப்பட்டிருந்தும் அதன் உரிமை மாற்றம் செய்யப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியத்தில் பதியப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆகஸ்ட் மாதத்தின் போது செலுத்தப்பட்ட ரூபா 25,000 தொகையான காசோலை ஒன்று காணாமல் போனதன் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது மீண்டும் ஒரு காசோலை வழங்கும் போது சரியாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டிற்கான வருமானம் மற்றும் முகாமைத்துவப் படிகள் ரூபா 25,000 இனால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான ரூபா 506,700 கூட்டுமொத்தமான கற்கை நெறிக்கட்டண வருமானம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் இருப்புக்கள் தனியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் தேசிய தொழில் கல்வி நிறுவனத்தில் ஆண்டின் இறுதி இருப்புக் கிரயம் ஆண்டிற்கான இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிறுவன ரீதியான பெயர்ப் பலகையை மின்னொளிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 295,300 பெறுமதியான

உபகரணங்களை மூலதனமாக்குவதற்குப் பதிலாக வருமானச் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மீள்மதிப்பு செம்மையாக்கலாக ரூபா 4,986 பெறுமதி காட்டப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவயவற்றுடன் இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில்கல்வி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 4(உ) ஆம் பிரிவு | நிறுவனத்தில் ரூபா 17 மில்லியன் தொகையான சராசரி மீதி ஒன்று ஆண்டு முழுவதும் காணப்பட்ட போதிலும் அப்பணத்தை முதலீடு செய்து நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396 | கொடுப்பனவுகக்காகச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 40,750 கூட்டு மொத்தமான 07 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 4,491,642 மிகையாக இருந்ததுடன், அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 502,932 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,988,710 தொகையான முன்னேற்றம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆண்டிற்கான செலவுகள் 30 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் கற்கைநெறி வருமானம் 17 சதவீதத்தால் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

2013 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு ஒப்பாக செலவுகளின் விகிதம் 98 சதவீதமாக இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது 79 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு வருமானம் 17 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டிலிருந்து 2015 இன் முதலாவது காலாண்டு வரை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்காகத் தயாரிக்கப்பட்டு தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளும் இலக்குகளை அடைந்துகொள்ளும் செயல்முன்னேற்றமும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) வேலைத்தள விளைதிறன் டிப்ளோமா கற்கை நெறிக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்துவதை இலக்காகக் கொண்டு அது நடாத்தப்பட்டதுடன் இலக்கிடப்பட்ட வருமானம் ரூபா 920,000 ஆக இருந்த போதிலும் கிடைத்த வருமானம் ரூபா 540,000 ஆக இருந்தது. வருமானம் உழைத்தல் ரூபா 380,000 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) மனிதவள முகாமைத்துவம் தொடர்பான மூன்று நாள் டிப்ளோமா கற்கை நெறிக்காக 2 பயிற்சி நிகழச்சித்திட்டங்களும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் தொடர்பான இரண்டு நாள் கற்கை நெறிக்காக 10 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் மனிதவளங்கள் முகாமைத்துவம் தொடர்பான 09 இரண்டு நாள் டிப்ளோமா பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் முறையே 01, 07 மற்றும் 07 கற்கை நெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(இ) நிறைவேற்று மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வர்த்தக சங்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 16 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 4 கற்கைநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாதிருந்த போதிலும் ரூபா 1,020,000 தொகையான இலக்கிடப்பட்ட வருமானமானது ரூபா 370,000 தொகையினால் மாத்திரம் குறைவடைந்திருந்தது.

(ஈ) நிறுவனத்தினால் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை அடைந்துகொள்ளுதல் முறையான ஆய்வுகளின் மூலமும் இடம்பெறவில்லை என்பது மேற்கூறிய இலக்குகளை அடைந்துகொள்ளும் சதவீதத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3(ஈ) பந்தியின் பிரகாரம் நூல் நிலையம் மற்றும் தகவல் வழங்கல் சேவையைத் தோற்றுவித்தலும் அவற்றைப் பேணுதலும் நிறுவனத்தின் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் கடந்த பல ஆண்டுகளாக நூல் நிலையத்திலிருந்து புத்தகங்களை இரவல் கொடுத்தலைப் போல அவற்றினைப் பயன்படுத்துதலும் இடம்பெறவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காக நிறுவனத்திற்கு கிடைத்த ரூபா 89,500 தொகை தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் வங்கி கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அது இன்று வரை மீளப் பெறப்பட்டு கணக்குகளில் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 750 இன் பிரகாரம் நிறுவனத்தின் இருப்பேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் சொத்துக்கள் 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுப் பெறுமதியானது 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பெறுமதியாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுப் பெறுமதி ஒரு வருடம் பழமைவாய்ந்தமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகமானது இணையதள கணனி நிகழ்ச்சித்திட்டத்துடன் அல்லது ஏனைய கணனி செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் போது 06 மடிக்கணனிகள் ரூபா 1,109,400 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் 2015 சனவரி 13 ஆந் திகதி நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றிருந்தும் அவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 184,900 பெறுமதியான மடிக்கணனி நிறுவனத்திற்கு மீள ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் நிறுவனத்தினால் நிரந்தரப் பதவி மற்றும் பதிற்கடமைப் பதவிக்காக 2 மடிக்கணனிகள் ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 45 ஆக இருந்ததுடன் 16 நிரந்தரப் பதவியணியினர் அமைச்சு மற்றும் திணைக்கள ஊழியர்களை உள்ளடக்கியிருந்தனர். மேலும் 29 பதவியணியினர் வெற்றிடமாகக் காணப்பட்டனர். இப்பதவியணியினரில் கணக்காய்வாளர் பதவிக்காக மாத்திரம் நிறுவகத்தினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்கள் 03 மாத தாமதத்தின் பின்னர் அதாவது 2015 மே 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

2014 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டமானது பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்வதற்காகத் திட்டமிடப்பட்ட 03 கணனிகள், 03 பெக்ஸ் இயந்திரங்கள், ஒரு டிஜிடல் கமரா என்பன கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஈ) நிதிக்கட்டுப்பாடு
(உ) கொள்வனவு நடவடிக்கைகள்